| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 6 Oct 2024 | The Cost will be greatly reduced... Vehicle insurance premium according to the distance traveled..! | Nanayam Vikatan |



சுபாசிஷ் மஜூம்தார்,
தலைவர் – மோட்டார் பாலிசி விநியோகம்,
பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்





# செலவு வெகுவாகக் குறையும்... பயணத் தூரத்துக்கேற்ப வாகன இன்ஷூரன்ஸ் பிரீமியம்..!

இன்றைய வாகன ஓட்டுநர்கள் தங்கள் வாகனத்தைப் பயன்படுத்துகிற அளவுக்கு மட்டுமே பணம் செலுத்தி சரியான கவரேஜ் கொண்ட வாகனக் காப்பீடுகளைப் (Vehicle Insurance) பெறுவதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இந்த மாற்றத்துக்கேற்ப, பொதுக் காப்பீட்டு நிறுவனங்களும் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப 'பர்சனலைஸ்டு' (Personalized) பாலிசிகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. அந்த வகையில், வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து புதுமையான பாலிசிகளை அறிமுகப்படுத்தி வருகின்றன.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா (General Insurance Council of India) அமைப்பு தரும் தகவல்கள்படி, இந்தியாவிலுள்ள வாகனங்களில் சுமார் 60% வாகனங்கள், காப்பீடு எதுவும் இல்லாமல் சாலைகளில் ஓடுகின்றன. காரணம், பல வாகன உரிமையாளர்கள், காப்பீடு பெறுவதை தேவை இல்லாத செலவு என்று நினைத்து பாலிசியைப் புதுப்பிக்காமல் விட்டுவிடுகிறார்கள்.

மேலும், வாகனக் காப்பீட்டுக்கான பிரீமியம் அதிகமாக அதுவும் குறிப்பாக, சொந்த சேதக் காப்பீட்டுக்கு (Own Damage Insurance) பிரீமியம் அதிகமாக இருப்பதால், பலரும் வாகனக் காப்பீட்டு பாலிசியை எடுக்காமலேயே இருந்துவிடுகிறார்கள்.

**வாகனம் ஓட்டுவதற்கேற்ப பிரீமியம் செலுத்துங்கள்...**

இந்த நிலையில், புதுமையான சலுகைகள் கொண்ட பாலிசிகளை இந்தியாவில் காப்பீட்டு நிறுவனங்கள் அறிமுகப்படுத்தி வருகின்றன. அதில் ஒன்றுதான், 'ஓட்டுவதற்கேற்ப பணம் செலுத்துங்கள்' (Pay as You Drive - PAYD) என்பது. அதாவது, வாகனத்தை நீங்கள் எவ்வளவு தூரம் ஓட்டுகிறீர்களோ, அந்தளவுக்கு மட்டும் பிரீமியம் தொகையக் கட்டினால் போதும்.

இந்த பி.ஏ.ஓய்.டி முறை, பல வளர்ந்த நாடுகளில் ஏற்கெனவே பிரபலமாக உள்ளது. இந்த முறையில், வாகனத்தின் உண்மையான பயன்பாட்டின் அடிப்படையில் பிரீமியம் கணக்கிடப்படுகிறது. வாகனம் ஓட்டப் படும் கிலோமீட்டர்களின் எண்ணிக்கை, வாகனத்தில் நிறுவப்பட்ட டெலி மாடிக்ஸ்

சாதனங்கள் மூலமாகவோ, காப்பீடு பாலிசி எடுத்தவர் வழங்கும் தரவு மூலமாகவோ கண்காணிக்க முடியும்.

வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனம் ஓட்டும் பழக்கம் மற்றும் தேவைக் கேற்ற வகையில் கிலோ மீட்டருக்கான தூரத்தைத் தேர்வு செய்யக் காப்பீட்டு நிறுவனங்கள் அனுமதி அளிக்கின்றன. இந்தத் திட்டம் காப்பீட்டு நிறுவனங் களைப் பொறுத்து கொஞ்சம் மாறுபடும்.

கூடுதலாக, விபத்து இல்லாமல் பாது காப்பாக வாகனம் ஓட்டும் நடத்தைக்குக் கூடுதல் நன்மைகளுடன் வெகுமதி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வாகனத்தைப் பொறுப்பாக ஓட்டுவதை ஊக்குவிக்கிறார்கள். இது போன்றவர் களுக்கு அடுத்து வரும் ஆண்டுகளில் பாலிசி எடுக்கும்போது பிரீமியத்தில் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

ஒரே இடத்தில் வசிப்பவர்கள் இணைந்து, குறிப்பிட்ட இடத்துக்குச் சேர்ந்து செல்ல கார்பூலிங் மூலம் எரிபொருள் செலவைக் குறைத்தல், குடும்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் அதிகரிப்பு மற்றும் மேம் படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்பு பயன்பாடு ஆகிய வற்றால் பி.ஏ.ஓய்.டி மிகவும் வேகமாக பிரபலம் அடைந்து வருகிறது. அதாவது, சொந்த வாகனங்களை வைத்திருப்பவர் கள் அதைக் குறைவான கிலோ மீட்டர் தூரத்துக்கு ஓட்டுவதால், பி.ஏ.ஓய்.டி இன்ஷூரன்ஸ் லாபகரமாக இருக்கிறது.

இந்த கிலோ மீட்டர்கள் சலுகை இன்றைய வாகன உரிமையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளுடன் நன்கு பொருந்தி வருவதாக இருக்கிறது.

**பி.ஏ.ஓய்.டி திட்டங்கள் வருடத்துக்கு 2,500 கிலோ மீட்டர்கள் எனத் தொடங்கி, 5,000, 7,500, 10,000 கிலோ மீட்டர் எனத் தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ளலாம்!**

### பி.ஏ.ஓய்.சி.டி எப்படிச் செயல்படுகிறது?

வாகன உபயோகத்துக்கேற்ப பிரீமியம் நிர்ணயம் செய்வதன் மூலம் பி.ஏ. ஓய்.டி பாலிசி நெகிழ்வுத்தன்மையுடன் காணப்படும் அதே நேரத்தில், பிரீமியத் துக்கான செலவையும் குறைக்கிறது.

பாலிசிதாரர்கள் தங்கள் சராசரி தினசரி அல்லது வருடாந்தர வாகன ஓட்டும் தூரத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கிலோமீட்டர் அளவைத் தேர்ந்தெடுக்கிறார்கள்: அதன்படி பிரீமியம் கணக்கிடப் படுகிறது.

இது, சட்டப்படியான மூன்றாம் தரப்பு கவரேஜ் பாலிசிக் காலம் முழுக்க செல்லுபடியாகும். அதே வேளையில், பி.ஏ.ஓய்.டி பாலிசி தேர்ந்தெடுக்கப்பட்ட கிலோமீட்டர் வரம்பை அடைந்த வுடன் சொந்த சேத கவரேஜ் முடிவடைகிறது.

இந்த நிலையில், கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் கவரேஜைப் பாலிசிதாரர்கள் பராமரிக்க முடியும். பொதுவாக, பி.ஏ.ஓய்.டி திட்டங்கள் வருடத்துக்கு *2,500* கிலோமீட்டர்கள் என்கிற அடிப்படை வரம்புடன் தொடங்குகின்றன. *5,000, 7,500, 10,000* கிலோ மீட்டர்கள் எனத் தேவைக்கேற்ப அதிகரித்து எடுத்துக்கொள்ளலாம்.


இந்தத் திட்டம், பாலிசிதாரர் டாப்-அப் செய்யத் தவறினால், க்ளெய்ம் பாதிக்கப்படாமல் இருக்க சில கருணை *(Grace)* கிலோ மீட்டர்களை வழங்கு கிறது. பாலிசியைப் புதுப்பிக்கும்போது பயன்படுத்தப்படாத கிலோமீட்டர்கள் அடுத்த ஆண்டுக்கு மாற்றப்படும்.

ஓராண்டில் ஓட்டக்கூடிய கிலோ மீட்டர்களுக்கு ஏற்ற பிரீமியம், பயன் படுத்தாத கிலோமீட்டர்களை அடுத்த ஆண்டு பயன்படுத்திக்கொள்ளலாம் என்கிற இந்த இரண்டு பிரத்யேக அம்சம் பாலிசிதாரர்களுக்கு மிகப் பெரிய நிம்மதி அளிப்பவையாக உள்ளன.

### இந்த பாலிசி யாருக்கு ஏற்றது?

பி.ஏ.ஓய்.டி இன்ஷூரன்ஸ் பாலிசி குறிப்பாக, தங்கள் வாகனங்களை அடிக்கடி பயன்படுத்தாதவர்களுக்கு மிகவும் பொருத்தமானது. தொலைதூரப் பயணங்களுக்கு எப்போதாவது தங்கள் கார்களைப் பயன்படுத்துபவர்களுக்கும், பல வாகனங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர் களுக்கும், அவற்றைச்

சமமாகப் பயன்படுத்தாதவர்களுக்கும், தினசரி பயணங்களுக்கு பொதுப் போக்குவரத்து அல்லது கார்பூலிங்கை முதன்மையாக நம்பியிருப்பவர்களுக்கும் இது ஏற்றது. அத்தகைய பயனர்களுக்கு, பி.ஏ.ஒய்.டி செலவு குறைந்த பாலிசியாக இருக்கும்.



**கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள்...**

இந்தப் பாலிசியை எடுக்கும் முன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்னென்ன என்று பார்ப்போம்...

**வாகனத்தை எவ்வளவு தூரம் ஓட்டுகிறீர்கள் என்பதை மதிப்பிடுங்கள்...**

இன்ஷூரன்ஸ் பாலிசி எடுக்கும்போது எத்தனை கிலோமீட்டர்கள் என்பதைத் தேர்ந்தெடுக்கும் முன், கூடுதல் கிலோமீட்டர்களுக்கு அதிக பிரீமியம் செலுத்துவதைத் தவிர்க்க ஆண்டுக்கு வாகன ஓட்டும் தூரத்தைத் துல்லியமாக மதிப்பிடுங்கள்.

**கவரேஜ் வரம்புகளைப் புரிந்துகொள்ளுங்கள்...**

கிலோமீட்டர் வரம்பை அடைந்தவுடன் சொந்த சேத கவரேஜ் நிறுத்தப்படும். கூடுதல் பிரீமியம் செலுத்தி, அதிக கிலோமீட்டர்களுக்கான இன்ஷூரன்ஸைப் பெற டாப்-அப் செய்வது எப்படி என்பதை முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். இதே போல, பாலிசியைப் புதுப்பிப்பது எப்படி என்பதை முன்கூட்டியே கேட்டுத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

**தள்ளுபடிகள் மற்றும் கிலோ மீட்டர் வேறுபாடுகள்...**

குறைந்த கிலோ மீட்டர்களுக்குப் பொதுவாக அதிக தள்ளுபடி கிடைக்கிறது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட கிலோ மீட்டர்களை அதிகரிக்கும்போது சேமிப்புக் குறைகிறது.

உங்கள் ஓட்டுநரின் தேவைகள் மற்றும் பிரீமியம் செலவுகளை சமநிலைப்படுத்தும் கிலோமீட்டர் ஸ்லாப்பைத் தேர்வு செய்வது லாபகரமாக இருக்கும்.

**பிரீமியத் தொகை ஈடுகட்டுதல்...**

பிரீமியம் நேரடியாக கிலோமீட்டர் பயன்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. எப்போதாவது தொலைதூரப் பயன்பாடு என்பதில் இருந்து தினசரி பயன்பாட்டுக்கு வாகனத்தை மாற்றும்போது கூடுதல் கிலோமீட்டர்களை வாங்க மறந்துவிடாதீர்கள்.

**மூன்றாம் தரப்புப் பொறுப்புக்கான கவரேஜ்...**

பி.ஏ.ஒய்.டி பாலிசி கிலோமீட்டர்களுடன் தொடர்புடையது, மூன்றாம் தரப்பு பொறுப்பு *(Third-Party Liability)* கவரேஜ் ஓராண்டுக்கு செயலில் இருக்கும் என்பதைப் புரிந்துகொண்டு செயல்படவும்.

**காப்பீட்டு அனுபவத்தை மகிழ்ச்சியாக்கும்...**

மேலே கூறப்பட்ட காரணிகள் உங்கள் வாகனம் ஓட்டும் பழக்கம் மற்றும் பட்ஜெட்டுடன் பி.ஏ.ஒய்.டி இன்ஷூரன்ஸ் பாலிசி மிகவும் பயனுள்ளதாக இருப்பதை நீங்களே நேரடியாகப் பார்ப்பீர்கள். இது உங்கள் வாகனக் காப்பீட்டு அனுபவத்தை மகிழ்ச்சியாகவும் சிக்கனமாகவும் மாற்றும். வாகனக் காப்பீடுகளை எடுத்துவிட்டு, அதன்பிறகு, அதைப் புதுப்பிக்காதவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தி இனி தொடர்ந்து புதுப்பிப்பார்கள் என எதிர்பார்க்கலாம்!